# SECONDARY SCHOOL
# END - OF - YEAR EXAMINATION - 2017
## TAMIL LANGUAGE PAPER
## SECONDARY 3 EXPRESS / 3NA

---

குறிப்புகள் :

1. ஒவ்வொரு வினாத் தொகுதியின் தொடக்கத்திலுள்ள குறிப்புகளைப் படித்துப் புரிந்துகொண்டு அதன்படி வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.

2. விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள விடைத் தாளிலேயே எழுத வேண்டும்.

பெயர் : ____________________

வகுப்பு : ____________________

மதிப்பெண்கள் : /70

---

இவ்வினாத்தாளில் அடங்கியுள்ள வினாக்கள் பக்கம் 2 முதல் 10 வரை அச்சிடப் பட்டுள்ளன. கடைசி வினாவின் கீழ் 'முற்றும்' என்னும் சொல் காணப்படும்.

---

**SECONDARY 3 EXPRESS**

**SECONDARY 3 SET 7 /15**

More papers at www.testpapersfree.com

உமறுப்புலவர் தமிழ்மொழி நிலையம்
உயர்நிலை 3 விரைவு
தமிழ் - தாள் 2

பெயர் ____________________ மொத்த மதிப்பெண்கள் : 70

நேரம் : 1 1/2 மணி

"அ" பிரிவு

A1 மரபுத்தொடர்கள், இணைமொழிகள் (10 மதிப்பெண்கள்)

கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற சொற்றொடர்கள் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப் பொருத்தமான சொற்றொடரைத் தேர்ந்தெடுத்து, அதன் எண்ணை மட்டும் விடைத்தாளில் எழுதுக.

Q1. பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்கு அதிகச் செல்லம் கொடுத்து வளர்ப்பதால் அவர்கள் ______________ நினைப்பதைச் சாதித்துக் கொள்கின்றனர்.

Q2. உலகக்கிண்ணக் காற்பந்தாட்டத்தில் ஸ்பெயின் நாட்டுக் குழுவினர் ______________ ஒரு கோல் போட்டுப் பார்வையாளர்களைத் திகைக்க வைத்தனர்.

Q3. குமாரின் குடும்பம் ______________ அவரின் முன்கோபமே காரணமாய் அமைந்துவிட்டது.

Q4. ஒரு நாட்டு மக்களின் கடின உழைப்பாலும் ஒற்றுமையாலும் அந்நாடு ______________ திகழ்கிறது.

Q5 வேலைமுடிந்து வீட்டுக்குத் திரும்பும் பெண்கள் பலர், கடைகளில் வீட்டிற்குத் தேவையான பொருள்களை ______________ வாங்கிக்கொண்டு போகின்றனர்.

| | |
|---|---|
| 1. ஒரு காலில் நின்று | 6. பழிவாங்க |
| 2. அவசரக்குடுக்கையாக | 7. எடுத்த எடுப்பில் |
| 3 இரண்டுபட | 8. உயர்வு தாழ்வின்றி |
| 4. தட்டிக்கேட்டு | 9. சிட்டாய் பறந்து |
| 5. ஒப்பு உயர்வின்றி | 10. அறக்கப் பறக்க |







More papers at www.testpapersfree.com

A2. வாக்கியங்களை முடித்தெழுதுதல் (10 மதிப்பெண்கள்)

பின்வரும் வாக்கியங்களைப் பொருத்தமான சொற்களைக் கொண்டு முடித்துக் காட்டுக. அவ்வாறு முடிக்கப்பெறும் வாக்கியங்கள் ஒவ்வொன்றும் அதற்கு முந்தைய வாக்கியத்தின் கருத்தையே கொண்டிருக்க வேண்டும். உமது விடைகள் மட்டும் விடைத்தாளில் எழுதுக.

**Q6.** மரங்கள் மனிதனுக்குக் குளிர்ந்த நிழலையும் சுவையான கனிகளையும் தருகின்றன.

குளிர்ந்த நிழலும் சுவையான கனிகளும் ____________________

**Q7.** நேரத்தைத் திட்டமிட்டுப் பயன்படுத்தாவிட்டால் எந்த வேலையையும் எளிதாகச் செய்ய முடியாது.

எந்த வேலையையும் எளிதாகச் செய்ய ____________________

**Q8.** நாகரிகம் வளர வளர மக்களின் தேவைகள் அதிகரித்து வருகின்றன.

மக்களின் தேவைகள் அதிகரித்து வருவதற்கு ____________________

**Q9.** கடுமையான பனிப்பொழிவின் காரணமாக சீனாவில் விளைந்த நெற்பயிர்கள் அழிந்தன.

கடுமையான பனிப்பொழிவு ____________________

**Q10.** பல அறிவியல் செய்திகளை எழுத்தாளர் சுஜாதா தன் படைப்புகளின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

எழுத்தாளர் சுஜாதாவின் படைப்புகள் ____________________



More papers at www.testpapersfree.com

"ஆ" பிரிவு

B3. அமைப்புச் சொற்கள்: ( 10மதிப்பெண்கள்)

கீழ்வரும் பகுதியில் கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கேற்ற அமைப்புச்சொற்கள் பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கேற்ற மிகப்பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை மட்டும் எழுதுக.

இந்த நவீன உலகில் மனிதன் ஓய்வின்றி வாழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இத்தகைய வாழ்க்கையிலிருந்து விடுபட்டு மனமகிழ்ச்சி பெற கதை, கட்டுரை, கவிதை போன்றவற்றை வாசிப்பது மிகவும் அவசியமாகும். இதற்கு (Q11.) ______ பழக்கம் பெரிதும் உதவுகிறது. சொந்தமாகக் கதை, கட்டுரை, கவிதை எழுத விரும்புகிறவர்கள் முதலில் (Q12.) தொடர்பான பல நூல்களைப் படித்து அறிய வேண்டும். அப்போதுதான் (Q13.) படைப்புகளைப் படைக்கும் போது அவை தரமானதாக இருக்கும்.

மாணவர்கள் பள்ளியில் தினமும் பலவிதமான பாடங்களைப் படிக்கிறார்கள். அவை மட்டும் அவர்களுடைய அறிவை வளர்க்காது. பாடங்கள் சம்பந்தப்பட்ட மேலும் பல தகவல்களைப் பெற நாம் (Q14.) _ பல நூல்களை வாசிக்க வேண்டியது அவசியமாகிறது. ஒரு மொழியில் புலமை பெற அம்மொழியில் வெளிவந்துள்ள பல புத்தகங்களை வாசிக்க வேண்டும். அவ்வாறு வாசிப்பதால் அம்மொழியில் அவர்கள் (Q15.) ______ விளங்க முடிகிறது. அத்துடன் ஒரு மொழியில் உள்ள புதிய சொற்களை அறிய அவற்றின் பொருளை உணர்ந்து சரியான முறையில் பயன்படுத்தவும் வாசிப்பு அவசியமாகிறது.

| | |
|---|---|
| 1. அவை | 6. சொந்த |
| 2. அதிகம் | 7. வாசிக்கும் |
| 3. சிறந்து | 8. பெரிய |
| 4. கற்கும் | 9. வாழ்க்கை |
| 5. சரியாக | 10. வேறு |




More papers at www.testpapersfree.com

"இ" பிரிவு

C4 தெரிவுவிடைக் கருத்தறிதல்.( 10 மதிப்பெண்கள்)

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து அதனடியில் காணும் வினாக்களுக்கு விடை தருக.

பகுதி 1



மனிதனின் அடிப்படைத் தேவைகளுள் முக்கியமானது உணவு. ஆரோக்கியம் தரும் உணவுடன் நல்ல உணவுப்பழக்கமும் இல்லையென்றால் நம்மால் உடல் நலத்துடன் நீண்டகாலம் வாழ முடியாது. ஒருவரின் உடல், வளர்ச்சி பெற உதவுவது புரதச்சத்தாகும். புரதச்சத்தை இறைச்சி, மீன், முட்டை, பயிறு வகைகள் போன்றவற்றிலிருந்து பெறலாம். நம் உடலை இயக்குவதற்கும் நாம் பணி புரிவதற்கும் ஆற்றலைக் கொடுப்பது மாவுச் சத்தாகும். இதனை நாம் அரிசி, கோதுமை, கிழங்கு போன்றவற்றிலிருந்து பெறலாம். நம் உடல் வெப்பமாக இருக்கக் கொழுப்புச்சத்துப் பயன்படுகிறது. ஆனால் வெப்பநாடுகளில் வசிப்பவர்களுக்குக் கொழுப்புச்சத்து அதிகம் தேவையில்லை. உடலை நோயின்றிக் காப்பவை வைட்டமின்கள் என்னும் உயிர்ச்சத்துகளாகும். பொதுவாக எல்லா வகையான காய்கறிகளிலும் கீரைகளிலும் போதிய வைட்டமின்கள் அடங்கியுள்ளன.

நாம் உண்ணும் உணவில் எல்லாவிதமான ஊட்டச்சத்துகளும் போதிய அளவு உள்ளனவா என்பதைக் கவனிக்க வேண்டும். நமக்கு அரிசியே முக்கிய உணவாக இருந்து வருகிறது. இந்நிலை மாற வேண்டும். அரிசியில் மாவுப்பொருளைத் தவிர்த்து ஊட்டந்தரக்கூடிய பொருள் ஒன்றும் இல்லை. ஆகையால், அரிசி உணவைக் குறைத்துக் கோதுமை உணவை அதிகம் உண்ண வேண்டும். முழுக்கோதுமை ரொட்டியும் சப்பாத்தியும் உடலுக்குத் தேவையான ஊட்டத்தைத் தருகின்றன. மற்றும் உணவில், இறைச்சி, மீன், முட்டை, காய்கறிகள், பழங்கள், கீரைவகைகள் ஆகியவற்றை மிகுதியாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும். வயிறு நிரம்ப உண்பதைவிட உணவைத் தேவையான அளவு உண்கிறோமா என்பதுதான் மிகவும் முக்கியம்.

More papers at www.testpapersfree.com

<u>வினாக்கள்</u>

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு தெரிவுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணைமட்டும் விடைத்தாளில் எழுதுக.

Q16. நாம் எப்போது உடல் நலத்துடன் நீண்டகாலம் வாழமுடியும்?

(1) புரதச்சத்து உணவுகளை உண்ணும்போது
(2) சரியான உணவை உண்ணும்போது
(3) நல்ல உணவுப்பழக்கத்தை மேற்கொள்ளும்போது
(4) பலவித உணவுகளை உட்கொள்ளும்போது

Q17. இறைச்சி,மீன்,முட்டை போன்றவற்றை உண்பதால் ஏற்படும் நன்மை என்ன?

(1) பணிபுரிவதற்கு வேண்டிய ஆற்றலைக் கொடுக்கின்றன
(2) உடல் நன்கு வளர உதவுகின்றன
(3) நம் உடல் இயங்குவதற்கு உதவுகின்றன
(4) நம் உடல் வெப்பத்தைக் காக்க உதவுகின்றன

More papers at www.testpapersfree.com


வாழ்க்கையில் வெற்றி பெறும் கலையை முழுக்க முழுக்க இன்னொருவர் கற்றுத் தந்துவிட முடியாது. நாமாகத்தான் கற்க வேண்டும். நாமாகத்தான் உள்வாங்க வேண்டும். எல்லா மாணவர்களுக்கும் ஆசிரியர் ஒரே மாதிரிதான் கற்றுத் தருகிறார். அதிகமாகப் புரிந்துகொண்டு உள்வாங்கும் திறன் உடையவன்தான் அதிக மதிப்பெண் பெறுகிறான்.

நடிப்புக் கல்லூரியில் நடிப்பைப் படிப்பாக முடித்த எவரும் நடிகர் திலகம் சிவாஜி கணேசன்போல் ஆவதில்லை. ஒன்றைப் பிறர் சொல்லிக் கொடுப்பதைவிடத் தானே கற்றுக் கொள்வதில்தான் வெற்றி அடங்கியிருக்கிறது. நடிகர் திலகம் சிவாஜி கணேசன் எந்தக் கல்லூரியிலும் நடிப்பைக் கற்கவில்லை. உலகம் முழுவதிலும் இருந்துதான் நடிப்பைக் கற்றுக் கொண்டார். உலகில் உள்ள அனைத்து நடிகர்களையும் பார்த்து, படித்துக் கற்றுக்கொண்டார்.

சொல்லிக் கொடுப்பதில் வேறுபாடு இருக்க முடியாது. ஆனால் கற்றுக் கொள்வதில் வேறுபாடு இருக்க முடியும். தனித்தன்மை சுடர்விட முடியும். இதனைப் புரிந்து கொள்ளாமல் சிலர், புகழ்பெற்றவர்கள் வெற்றி ரகசியங்களை மறைத்து வைப்பதாகக் குற்றம் சாட்டுகிறார்கள். இது ஒரு தவறான செயல். தூக்கத்தில் இருந்து உடல் விழித்தால் போதாது; மனமும் விழிக்க வேண்டும்; மூளையின் சன்னல்களை மூச்சுக் காற்றால் திறக்க வேண்டும்; அப்போதுதான் நிறையச் செய்திகளைப் புரிந்துகொள்ள முடியும்.

கேள்விகளுக்குப் பதில் தருவது கல்வி ஆகாது. கேள்வி கேட்கும்போதுதான் கல்வி ஆரம்பமாகிறது. கேள்விகளைத் தயாரித்து, அதற்கான பதிலையும் தயாரித்து, அதை எழுதும்படி மாணவர்களையும் தயார்படுத்துபவர் ஆசிரியர் ஆகமாட்டார். கேள்விகளையும் கேட்டு அதற்கான பதிலையும் தயாரிக்கும்படி மாணவனைத் தயார்படுத்துபவரே உண்மையான ஆசிரியர் ஆவார். வாழ்க்கை ஒரு வித்தியாசமான தேர்வு. இங்கே கேள்வி, பதில் இரண்டையும் தயாரித்துத் தந்துவிட முடியாது. நாம்தான் நம்மை வாழ்க்கைக்குத் தயார் செய்துகொள்ள வேண்டும்.

(தழுவல் : வெற்றி நிச்சயம்)



More papers at www.testpapersfree.com

வினாக்கள்

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை மட்டும் விடைத்தாளில் எழுதுக.

Q18 ஒருவன் எப்போது அதிக மதிப்பெண் பெறுகிறான்?

(1) அவன் பெற்றிருக்கும் திறமையை அறிந்திருக்கும்போது

(2) அவன் வெற்றி பெறும் கலையைத் தெரிந்திருக்கும்போது

(3) அவன் கற்றுக்கொடுப்பதைப் புரிந்துகொள்ளும் திறனைப் பெற்றிருக்கும்போது

(4) அவன் ஆசிரியர் கூறுவதைப் புரிந்துகொண்டு செயல்படும்போது ( )

Q19 நடிப்புக் கல்லூரியில் நடிப்பைப் பற்றிப் படித்த எவரும் ஏன் நடிகர் திலகம் சிவாஜி கணேசன்போல் ஆவதில்லை ?

(1) தனித்திறமை இல்லாதவர்களாக இருக்கிறார்கள் என்பதனால்

(2) சுய சிந்தனை இல்லாதவர்களாக இருக்கிறார்கள் என்பதனால்

(3) கற்பிப்பதை மட்டும் கவனிப்பவர்களாக இருக்கிறார்கள் என்பதனால்

(4) மற்றவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளாதவர்களாக இருக்கிறார்கள் என்பதனால்

( )

Q20 அதிகம் கற்றுக்கொள்வதற்கான சிறந்த வழி யாது?

(1) தனித்தன்மையைச் சுடர்விடும்போது

(2) மூளையின் சன்னல்களைத் திறக்கும்போது

(3) உடல் விழித்திருக்கும்போது

(4) மனம் விழித்திருக்கும்போது ( )

More papers at www.testpapersfree.com

"ஈ" பிரிவு

## D5. சுயவிடைக் கருத்தறிதல் (25 மதிப்பெண்கள்)

*பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உம் சொந்த நடையில் விடை எழுதுக.*

பண்புகளைக் குறிக்கும் பிற சொற்களைப்போல் "வெற்றி" என்னும் சொல்லையும் விளக்குவது கடினம். "நல்லது" என்பதை யாரும் நேரில் பார்த்ததில்லை. ஆனால் நல்ல மனிதர்களை நாம் ஏராளமாகப் பார்க்கின்றோம். வெற்றி என்பதும் அப்படிப்பட்டதுதான். ஒருவன் தான் விரும்பிய ஒன்றை அடையப்பெற்றான் என்றால் அல்லது எடுத்துக்கொண்ட காரியத்தை நன்கு செய்து முடித்தானென்றால் அது வெற்றி என்று கூறப்படுகிறது. தேர்வில் முதலிடத்தில் வெற்றி பெறுவது, விரும்பிய பணி கிடைப்பது, பல இடையூறுகளுக்கிடையில் வெற்றிகரமான தொழில் ஒன்றைத் தொடங்குவது இவையெல்லாம் வெற்றிக்கான எடுத்துக்காட்டுகளாகும். இந்த வெற்றிகள் இல்லையென்றால் வாழ்க்கை போராட்டமானதாக அமைந்துவிடும்.

பிரச்சினைகள் இன்றி வாழ முடியாது என்பதை மக்கள் நன்கு அறிவர். ஆயினும் அவர்களும்கூட பிரச்சினையிலிருந்து *மீண்டு* பிரச்சினை இல்லா நிலையை எய்த வேண்டுமென்றுதான் விரும்புகின்றனர். ஒரு விரும்பத்தக்க செயல் அல்லது சிறு வெற்றியை அடைந்து அதன் மூலம் வரும் மனஅமைதியை வாழ்க்கை முழுவதும் தக்க வைத்துக்கொள்வது என்பது அவ்வளவு எளிதன்று. இருந்தும், தெரிந்தோ தெரியாமலோ நாம் அனைவரும் இதனைத்தான் தக்க வைத்துக் கொள்ள விரும்புகின்றோம். மகிழ்ச்சியாகவும் வெற்றிகரமாகவும் இருக்க விரும்புவது *உன்னதமானது*. காரணம், இது சக மனிதர்களின் நலத்திற்கும், மகிழ்ச்சிக்கும்கூடத் தன்னால் இயன்ற பங்கினை அளிக்கின்றது. வெற்றியும் மகிழ்ச்சியும் பெற்ற மனிதர்கள் சமுதாயத்தில் ஒரு *சாதகமான* சூழ்நிலையை உருவாக்குகிறார்கள்.

ஒவ்வொரு மனிதனுக்கும் இப்பூமியில் போதுமான இடமும் சாதனங்களும் உள்ளன. அதில் நம்முடைய கடமை என்னவென்பதைக் கண்டுபிடித்து அதை வெற்றி பெறச்செய்வதே நமது தேவையாகும். எனவே வாழ்க்கையைப் பரந்த நோக்கில் பார்க்க வேண்டும். ஒவ்வொரு தனி நபரும் ஒரு வெற்றிகரமான இடத்தைத் தக்க வைத்துக் கொள்ள உதவும் குறிப்புகளை இனம் காண்பது மிகவும் *இன்றியமையாதது*. முறையான வளர்ச்சிக்கு வாய்ப்புகள் இல்லாமைதான் பெரும்பாலான தோல்விகளுக்கும், துன்பங்களுக்கும் மூல காரணமாக உள்ளன என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஒருவனுக்கு வேலை இல்லை என்றாலோ அல்லது தவறான பணியில் இருந்தாலோ அம்மனிதனின் தோல்விக்கு மூன்று முக்கிய குணங்கள் காரணமாக இருக்கின்றன. அவை தன் மீதே ஐயங்கொள்ளுதல் குறிக்கோள் இன்மை மற்றும் சோம்பல் என்பவையாகும். இந்த மூன்று இடர்ப்பாடுகளும் ஒன்றோடொன்று தொடர்புடையன மற்றும் ஒன்று மற்றொன்றைத் *தோற்றுவிக்கின்றன*. அதனால், அவை மனிதர்கள், வெற்றியின் எல்லைக் கோட்டை நோக்கி முன்னேறுவதைத் தடுக்கின்றன. இதில் நம்பிக்கைக்குரிய விஷயம் என்னவென்றால் இந்த மூன்றில் ஏதேனும் ஒன்றை அழித்து விட்டால் நாம் வெற்றியை அடைந்து விடலாம்.

More papers at www.testpapersfree.com

*வினாக்கள்*

Q21. "வெற்றி" என்ற சொல்லுக்கு விளக்கம் தருக? (4 மதிப்பெண்கள்)

Q22. நாம் எத்தகைய நிலையைத் தக்கவைத்துக் கொள்ள விரும்புகின்றோம்? (5மதிப்பெண்கள்)

Q23. ஒருவர் வெற்றிகரமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழவேண்டும் என்பதை நீ ஏற்றுக் கொள்கிறாயா? ஏன்? (6 மதிப்பெண்கள்)

Q24. எவை மிகவும் இன்றியமையாதவையாகக் கட்டுரையாசிரியர் கூறுகிறார்? (' மதிப்பெண்கள்)

Q25. தோல்விக்குரிய முக்கிய காரணங்கள் யாவை? அவற்றை ஏன் நீக்கவேண்டும்? (6 மதிப்பெண்கள்)

## D6சொற்பொருள் (5 மதிப்பெண்கள்)

*கீழ்க்காணும் சொற்கள் மேற்கண்ட பகுதியில் இடம்பெற்றுள்ளன. அச்சொற்களின் பொருளை விடைத்தாளில் எழுதுக.*

Q26. மீண்டு ________________

Q27. உன்னதமானது ________________

Q28. சாதகமான ________________

Q29. இன்றியமையாதவையாகும் ________________

Q30. தோற்றுவிக்கின்றன ________________

***முற்றும்***



More papers at www.testpapersfree.com

# TESTPAPER 7

Set 8- விடைகள்

பெற்றோர்கள் தம் பிள்ளைகளுக்கு ..........

Q1. 4 Q2. 7 Q3. 3 Q4. 5 Q5. 10

Q6. . . மனிதனுக்கு மரங்களால் தரப்பட்டவை ஆகும்.

Q7. . . நேரத்தைத் திட்டமிட்டுப் பயன்படுத்த வேண்டும்.

Q8. . . காரணம் நாகரிகம் வளர்ந்து கொண்டிருப்பதே ஆகும்.

Q9. . . சீனாவில் விளைந்த நெற்பயிர்கள் அழியக் காரணமாக இருந்தது.

Q10. . . பல அறிவியல் செய்திகளை வெளிப்படுத்தியுள்ளன.

Q11. 7 Q12. 9 Q13. 6 Q14. 10 Q15. 3

Q16. 3 Q17. 2 Q18. 3 Q19. 3 Q20. 4

Q21. ஒருவன் தான் விரும்பிய ஒன்றை அடையப் பெற்றதையோ அல்லது எடுத்துக் கொண்ட காரியத்தை நன்கு செய்து முடித்ததையோ 'வெற்றி'' என்ற சொல்லுக்கு விளக்கமாகக் கொள்ளலாம்.

Q22. ஒரு விரும்பத்தக்க செயல் அல்லது சிறு வெற்றியை அடைந்து அதன் மூலம் வரும் மன அமைதியை வாழ்க்கை முழுதும் தக்க வைத்துக் கொள்ளும் நிலையையே தெரிந்தோ தெரியாமலோ நாம் விரும்புகின்றோம்.

Q23. ஒருவர் வெற்றிகரமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழவேண்டும் என்பதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அதற்குக் காரணம், அவ்வாறு செய்வது உன்னதமானது என்பதோடு இது சக மனிதர்களின் நலத்திற்கும் மகிழ்ச்சிக்கும் கூடத் தன்னால் இயன்ற பங்கினை அளிக்கிறது என்பதே ஆகும். மேலும், வெற்றியும் மகிழ்ச்சியும் பெற்ற மனிதர்கள் சமுதாயத்தில் ஒரு சாதகமான சூழ்நிலையை உருவாக்குகிறார்கள் என்பதும் இன்னொரு காரணமாகும்.

Q24. நம்முடைய கடமை என்னவென்பதைக் கண்டுபிடித்து அதை வெற்றி பெறச் செய்வதையும் வாழ்க்கையைப் பரந்த நோக்கில் பார்ப்பதையும் ஒவ்வொரு தனிநபரும் ஒரு வெற்றிகரமான இடத்தைத் தக்க வைத்துக் கொள்ள உதவும் குறிப்புகளை இனம் காண்பதையும் மிகவும் இன்றியமையாதவையாகக் கட்டுரையாசிரியர் கூறுகிறார்.

Q25. தோல்விக்குரிய முக்கியக் காரணங்கள் முறையான வளர்ச்சிக்கு வாய்ப்புகள் இல்லாமை, தன் மீதே ஐயம் கொள்ளுதல், குறிக்கோள் இன்மை, சோம்பல் ஆகியவையே ஆகும். இந்த இடர்ப்பாடுகள் ஒன்றோடொன்று தொடர்புடையன மற்றும் ஒன்று மற்றொன்றைத் தோற்றுவிக்கின்றன என்பதால் மனிதர்கள் வெற்றியின் எல்லைக் கோட்டை நோக்கி முன்னேறுவதைத் தடுக்கின்றன. ஆகவேதான் அவற்றை நீக்க வேண்டும்.

Q26. விடுபட்டு வந்து

Q27. மேன்மையானது, உயர்வானது

Q28. அனுகூலமாக, நன்மை தரும்

Q29. முக்கியமானவையாகும்

Q30. தோன்றச் செய்கின்றன

More papers at www.testpapersfree.com